**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **48**

| | | | |
|---|---|---|---|
| Name: | அமானுல்லா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2. A4, A7, A8, A9, A10, A13, A14, A15, A17, A19 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **15.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி மவுண்ட் ரோட்டில் குடியிருந்து வருகிறேன். தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தில் மருத்துவ அணி செயலாளராகவும், ஆட்டோ ஓட்டுநராகவும் இருந்தேன் 2007 ம் ஆண்டு நான் பெங்களூரில் ஓட்டலில் வேலைபார்த்து வந்தேன். அப்போது எங்கள் குடும்பத்தினர் ஊருக்குள் இந்து முஸ்லீம் கலவரம் நடந்து வருகிறது அதனால் ஊருக்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டார்கள். பின்னர் ஒருமாதம் கழித்து தென்காசிக்கு திரும்பினேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-</u>**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தில் மருத்துவ அணி செயலாளராகவும், ஆட்டோ ஓட்டுநராகவும் இருந்தேன் என்றும் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் கட்சி சார்பில் ஒரு ஆம்புலன்சு வாங்கியதாகவும் அந்த ஆம்புலன்ஸ் வழக்கமாக மவுண்ட்ரோடு ஆட்டோ ஸ்டாண்டில் தான் நிற்கும் என்றும் தேவைப்படும்போது நானே அந்த ஆம்புலன்சை ஓட்டி செல்வேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பஷீர், நாகூர் மீரான், அப்துல்லா, ராஜா முக்கம்மது, செய்யது அலி, மீரான் மைதீன், அபு அயூப்அன்சாரி ஆகியோர்களை தெரியும். அவர்கள் எத்தனைபேர் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் உறுப்பினர்கள் என்று ஞாபகம் இல்லை. கடந்த 14.08.2007 ம் தேதி காலை10.30 மணிக்கு தென்காசி கூலக்கடை பஜாரில் எங்கள் கட்சியை சேர்ந்தவர்களுக்கும் இந்து முன்னனியை சேர்ந்த சக்திபாண்டியன் வகையறாக்களுக்கும் மோதல் ஏற்பட்டு சிலர் கொலை செய்யப்பட்டுவிட்டதாகவும் சிலர் காயமடைந்ததாகவும் கேள்விப்பட்டு நான் ஆம்புலன்சை எடுத்துக்கொண்டு கூலக்கடை பஜாருக்கு சென்றேன் என்றும் அங்கு மேலமுத்தாரம்மன் கோவில் முன்னர் எங்கள் கட்சியை சேர்ந்த அசன்கனி வெட்டப்பட்டு இறந்துகிடந்தார் என்றும் அதற்கு சற்று மேல்புறம், தென்காசி மலையான் தெரு சொர்ணத்தேவர் மகன் சேகரும், முத்து டீ ஸ்டால் கடை முன்னர் சேகரின் தம்பி சுரேசும் வெட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்தார்கள் என்றும் அங்கு

படுகாயங்களுடன் கிடந்த எங்கள் கட்சியை சேர்ந்த பஷீர், நாகூர் மீரான், அப்துல்லா, ராஜா முக்கம்மது, செய்யது அலி, மீரான் மைதீன், அபு அயூப்அன்சாரி ஆகியோர்களை என் ஆம்புலன்சில் இரண்டுதடவையாக ஏற்றி தென்காசி அரசு மருத்துவமனை கொண்டுபோய் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்றும் பஷீர் மருத்துவமனைக்கு போகும் வழியில் இறந்துவிட்டார் என்றும் நாகூர்மீரான், அப்துல்லா, ராஜாமுக்கம்மது, செய்யது அலி, மீரான் மைதீன், அபுஅயூப்அன்சாரி மற்றும் ஏற்கனவே அங்கு சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டிருந்த தென்காசி மலையான் தெரு, சொர்ணத்தேவர் மகன் செந்தில் ஆகியோர்களுக்கும் முதலுதவி செய்து அவர்களை இரண்டு ஆம்புலன்சில் பாளையங்கோட்டை ைஹகிரவுண்ட் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும் காயம்பட்ட நவாசை எனது ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு நானும் பாளையங்கோட்டை ைஹகிரவுண்ட் மருத்துவமனைக்கு போனதாகவும் பாளையங்கோட்டை மருததுவமனையில் செந்திலும், நாகூர் மீரானும் இறந்துவிட்டார்கள் என்றும்சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக்கழகத்தில் தென்காசி நகர பொறுப்பில் இருந்து வந்ததால் இஸ்லாமியருக்கு எதிரான வழக்கில் இவ்வழக்கின் எதிரிகள் பிறழ்சாட்சியாகவும் இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக நாங்கள் பிறழ்சாட்சியாகவும் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற எங்கள் தரப்பு ரகசிய உடன்படிக்கையின் அடிப்படையில் நான் 14.08.2007ம் தேதி தென்காசியில் இல்லை என்றும் போலீசார் விசாரிக்கவில்லை என்றும்

உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பெங்களூரில் வேலைபார்த்த உணவு விடுதி மற்றும் பெங்களூரில் தங்கியிருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் என் வசம் இல்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

_